# ஆகஸ்ட்– 13 – திங்கள்

## புனித போன்சியன் இப்போலித்தல்

**மானிடமகன் மக்களின் கையில் ஒப்புவிக்கப்பட விருக்கின்றார். அவர்கள் அவரைக் கொலைசெய்வார்கள்"**
***மத். 17:22"***

## முதல் வாசகம் : ஏசேக்கியல் 1: 2 –5,24 – 28

அந்த மாதத்தின் ஐந்தாம் நாளன்று-யோயாக்கீன் அரசன் நாடு கடத்தப்பட்ட ஐந்தாம் ஆண்டு. கல்தேயர் நாட்டின் கெபார் ஆற்றோரம், பூசி என்ற குருவின் மகன் எசேக்கியேலுக்கு, ஆண்டவரது வாக்கு அருளப்பட்டது. அங்கே ஆண்டவரின் கைவன்மை அவர்மேல் இருந்தது.நான் உற்றுப்பார்க்கையில், வடக்கிலிருந்து புயற்காற்று விரைந்து வந்தது. மின்னலடிக்கும் பெருமேகத்தையும் அதனைச் சுற்றிச் சுடர்வீசும் தீப்பிழம்பையும், அத்தீம்பிழம்பினுள் மின்னும் வெண்கலம் போன்ற ஒன்றையும் கண்டேன்.அதன் நடுவினின்று நான்கு உயிரினங்களின் வடிவம் தோன்றியது. அவற்றின் தோற்றம் மனிதச்சாயலுக்கு ஒப்பாயிருந்தது.அவை செல்லும்போது அவற்றின் இறக்கைகள் எழுப்பிய ஒலியைக் கேட்டேன். அது பெருவெள்ளத்தின் இரைச்சல் போன்றும், எல்லாம் வல்லவரின் குரலொலி போன்றும் இருந்தது. அவை இயங்கும்போது ஏற்படும் இரைச்சலின் ஒலி ஒரு போர்ப்படையின் இரைச்சலை ஒத்த ஆரவாரமாக இருந்தது. அவை நின்றபோது தங்கள் இறக்கைகளை இறக்கிக்கொண்டன.அவை தங்கள் இறக்கைகளை இறக்கி நின்றபோது அவற்றின் தலைக்கு மேலிருந்த கவிகையின் மீதிருந்து குரலொன்று கேட்டது.அவற்றின் தலைக்கு மேலிருந்த கவிகையின்மீது நீல மணிக்கல் தோற்றமுடைய ஓர் அரியணை போன்ற ஒன்று தெரிந்தது. அந்த அரியணை மேல் மனிதச் சாயலுக்கு ஒப்பான ஓர் உருவமும் தெரிந்தது.அவரது இடைக்கு மேற்புறம் சுற்றிலும் பளபளக்கும் வெண்கலம் போன்றும். நெருப்பு சூழ்ந்திருப்பதுபோன்றும் இருக்க நான் கண்டேன். அவரது இடைக்குக் கீழ்புறம் நெருப்புப் போன்றும் சுற்றிலும் ஒளிமயமாயும் இருக்கக் கண்டேன்.சூழ்ந்திருந்த ஒளியும் கார்கால மேகத்தினிடையே காணப்படும் வானவில்போன்று தோன்றியது. இது ஆண்டவரது மாட்சிமிகு சாயலின் காட்சி. இதை நான் பார்த்ததும் முகம் குப்புறவிழுந்தேன் அப்போது ஒருவர் பேசும் குரல் கேட்டேன்.

**பதில்பாடல் :** வானமும் வையமும் உமது மகிமையால் நிறைந்துள்ளன.

## நற்செய்தி : மத்தேயு 17 : 22 – 27

அக்காலத்தில் கலிலேயாவில் சீடர்கள் ஒன்று திரண்டிருக்கும்போது இயேசு அவர்களிடம், "மானிடமகன் மக்களின் கையில் ஒப்புவிக்கப்படவிருக்கிறார். அவர்கள் அவரைக் கொலை செய்வார்கள் ஆனால் அவர் மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பப்படுவார்" என்றார். அப்பொழுது அவர்கள் மிகவும் துயரடைந்தார்கள்.அவர்கள் கப்பர்நாகுமுக்கு வந்தபோது கோவில் வரியாக இரண்டு திராக்மா தண்டுவோர் பேதுருவிடம் வந்து, "உங்கள் போதகர் இரண்டு திராக்மா வரியைச் செலுத்துவதில்லையா? என்றுகேட்டனர்.அவர், "ஆம், செலுத்துகிறார்" என்றார். பின்பு வீட்டிற்குள் வந்து பேதுரு பேசத்தொடங்குவதற்கு முன்பே இயேசு, "சீமோனே உனக்கு எப்படித்தோன்றுகிறது? இவ்வுலக அரசர்கள் சுங்கவரியையோ தலைவரியையோ யாரிடமிருந்து பெறுகின்றார்கள்? தங்களுடைய மக்களிடமிருந்தா? மற்றவரிடமிருந்தா?" என்றுகேட்டார். "மற்றவரிடமிருந்துதான்" என்று பேதுரு பதிலளித்தார். இயேசு அவரிடம், "அப்படியானால் குடிமக்கள் இதற்குக் கட்டுப்பட்டவரல்ல.ஆயினும் நாம் அவர்களுக்கு தடையாய் இருக்கக்கூடாது. எனவே நீ போய்க் கடலில் தூண்டில்போட்டு முதலில் அகப்படும் மீனை எடுத்து அதன் வாயைத் திறந்து பார்த்தால் ஸ்தாத்தேர் நாணயத்தைக் காண்பாய். அதை எடுத்து உன்சார்பாகவும் என்சார்பாகவும் அவர்களிடம் செலுத்து" என்றார்.

**தியானம்:** ஆண்டவரது மாட்சிமிகு சாயல் இறைவாக்கினர் எசேக்கியேலுக்குக் காட்சியாக அருளப்பட்டதை இன்றைய முதல் வாசகத்தில் வாசிக்கின்றோம். மாட்சிமைமிக்க அரியணையில் மனிதச் சாயலுக்கு ஒப்பான ஒரு உருவம் காணப்பட்டதாக வர்ணிக்கப் படுகின்றது. அத்தனை மாட்சிமிக்க அரியணையை விட்டுவிட முடியாத ஒன்றாகப் பற்றிக் கொண்டிருக்காமல், நம்மைத் தீமையின் பிடியிலிருந்து விடுவிக்க மண்ணுலகம் வந்த இறைமகன் இயேசு தமக்கென்று ஒருவாழ்க்கைப் பாணியைப் அமைத்துக் கொண்டு வாழ விரும்பவில்லை. மாறாக, தாம் வாழ்ந்திருந்த சுற்றுச் சூழலுக்கும் சட்ட திட்டங்களுக்கும் அமைவாகவே வாழ்ந்து தம் பணியை மேற்கொள்ள முயற்சித்தார் என்பதை இன்றைய நற்செய்தி வாயிலாக நாம் அறிந்து கொள்ள முடிகின்றது. ஆனால், தம் தந்தை தம்மை இவ்வுலகுக்கு அனுப்பிவைத்த காரணத்துக்குத் தடையாக இருந்தவை அனைத்தையும் அவர் கண்டித்தும், கற்பித்தும் வந்தார் என்பதே இன்று நாம் தெரிந்து கொள்ள அழைக்கப்படுகின்றோம். அதன் நிமித்தமே அவர் மக்களின் கையிலும், அதன் அதிகாரத்திடமும் ஒப்படைக்கப்பட்டார். அவர்கள் அவரைக் கொலை செய்யும் அளவுக்குக் கொள்கைப் பிடிப்போடு வாழ்ந்து காட்டினார். இது தான் கிறிஸ்தவர்களாகிய நமது சின்மாகிய சிலுவை அடையாளம். இறைமகன் இயேசுவின் பெயரால் அவரது பணியைச் செய்ய முன் வந்திருக்கும் நாம் இன்று அவரது பாணியைப் பின்பற்றுகின்றோமா? அல்லது மக்களின் மனநிலைக்குப் பயந்து அல்லது பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் நமது பணிசெய்யும் பாணியையே மாற்றி அமைக்க முற்படுகின்றோமா? வளைந்து, நெளிந்து, குழைந்து இறைமகன் இயேசுவின் அற்புதபணிக்குப் பங்கம் விளைவிக்கின்றோமா? சிந்தித்துச் செயற்படுவோமா?